Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39

கதிர் : 141


திங்கட்கிழமை

15 ஏப்ரல் 2024

### முச்சந்தி முரளி



"ஜனாதிபதித் தேர்தல் முடிஞ்சாலும் இவை பொது வேட்பாளர் பற்றி பொதுவான முடிவுக்கு வரமாட்டினம் பாருங்கோ"



# தமிழ்ப் பொதுவேட்பாளர்; குழப்புகிறாரா விக்கி?

## அவசரத்தனமான நகர்வுகளால் சந்தேகம்

**யாழ்ப்பாணம், ஏப்ரல் 15**

**எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளரைக் களமிறக்குவது தொடர்பான விவகாரத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன், அவசரக்குடுக்கைத்தனமான நகர்வுகளை முன்னெடுப்பதால், பொதுவேட்பாளர் தொடர்பான நகர்வுகளில் தேவையற்ற குழப்பங்கள் உருவாகியுள்ளதாக அறியமுடிகின்றது.** 11

# பொதுவேட்பாளர்; நல்லதொரு நகர்வே!

## சிறீதரன் எம்.பி. தெரிவிப்பு



கிளிநொச்சி, ஏப். 15

தமிழ் மக்களின் திடமான அரசியல் கொள்கைக்கு தமிழ் பொதுவேட்பாளரைக் களமிறக்குவது அவசியமே என்று நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டவருமான எஸ். சிறீதரன் தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி அலுவலகத்தில் நேற்று இடம் பெற்ற புதுவருட நிகழ்வுகளைத் 11

# பொதுவேட்பாளர் விடயம் இனவாதத்தை தூண்டுமாம்

## சுமந்திரன் எம்.பி. கருத்து



யாழ்ப்பாணம், ஏப். 15

தமிழ்ப் பொதுவேட்பாளரை நிறுத்துவது இனவாதத்தைத் தூண்டும் செயற்பாடு என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'தமிழ்பொதுவேட்பாளர் நிறுத்தப்படவேண்டும் எனமுன்னையகாலங்களிலும் முயற்சிகள் செய்யப் 11

# தேர்தலைப் புறக்கணிக்குக

## கஜேந்திரன் அறைகூவல்

யாழ்ப்பாணம், ஏப். 15

ஜனாதிபதித் தேர்தல் பரப்புரைகள் இடம்பெற்று வருகின்ற நிலையில் வடக்கு மற்றும் கிழக்கில் வாழும் தமிழர்கள் தேர்தலைப் புறக்கணிக்கவேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செ. கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும்தெரிவித்துள்ளதாவது:-

சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ் மக்களுடைய உரிமைகளை ஏற்றுக்கொள்வதற்கோ, அவர்களைச் சுதந்திரமாக வாழவிடுவதற்கோ தயாராக இல்லை. இந்த நிலையில், தமிழர்கள் ஜனாதிபதித் தேர்தலிலிருந்து முற்றாக விலகியிருப்பதன் மூலமே தமிழ் மக்கள் தமக்கான 11

# தமிழ்ப் பொதுவேட்பாளரை ஒன்றுபட்டு ஆதரிப்போம்

## சித்தார்த்தன் எம்.பி. அழைப்பு



யாழ்ப்பாணம், ஏப். 15

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளரைக் களமிறக்குவதற்கு அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் ஒன்றிணையவேண்டும் என ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பங்காளிக் கட்சித் தலைவர்களுள் ஒருவரான த. சித்தார்த்தன் தெரிவித்துள்ளார். 11

# ஈரானுக்கான ஏற்றுமதி இரண்டு மடங்காகியது

கொழும்பு, ஏப். 15

ஈரானுக்கான தேயிலை ஏற்றுமதியை இலங்கை இரட்டிப்பாக அதிகரித்துள்ளது.

இதுவரை காலமும் மாதாந்தம் 5 மில்லியன் டொலர் பெறுமதியான தேயிலை ஈரானுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்த நிலையில் தற்போது 10 மில்லியன் டொலர் பெறுமதியான தேயிலையை அனுப்புமாறு 11

# இஸ்ரேல் மீது ஈரான் சரமாரித் தாக்குதல்!

விரிவு :- பக். 06

# வேலையற்றோர் தொகையில் வீழ்ச்சி

கொழும்பு, ஏப். 15

நாட்டில் வேலையற்றோர் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்துள்ளதாக புள்ளிவிவரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. 2021ஆம் ஆண்டு 5.5 சதவீதமாக காணப்பட்ட வேலையற்றோர் தொகை 2022ஆம் ஆண்டு 4.7 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளதாகப் புள்ளிவிவரவியல் திணைக்களத்தின் 2023 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை தெரிவித்துள்ளது. 11

# நுகர்வோர் அதிகாரசபை 'சோம்பேறித் திணைக்களம்'

## தேசிய கணக்காய்வு அலுவலகம் அறிக்கை

கொழும்பு, ஏப். 15

நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை சோம்பேறித்தனமாக செயற்பட்டு வருவதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் குற்றம் சாட்டியுள்ளது. 2022ஆம் ஆண்டு 50 க்கும் குறைவான தேடுதல் நடவடிக்கையே இலங்கை 11

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நேற்றுப் போராட்டம்

வவுனியா, ஏப். 15

சித்திரைப் புதுவருடத்தினமான நேற்று, காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் ஆர்பாட்டம் ஒன்று வவுனியாவில் முன்னெடுக்கப்பட்டது. போராட்டத்தின் முடிவில் ஊடகங்களுக்கு அவர்கள் தெரிவித்ததாவது:-

காணாமல் ஆக்கப்பட்ட தமிழ்க் குழந்தைகளைக் கண்டறியவும், எதிர்கால இனப்படுகொலையில் இருந்து தமிழர்களைக் காப்பாற்றவும், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவியைப் பெறுவதற்காக 2 ஆயிரத்து 611 ஆவது நாளாக நாம் போராடிவருகின்றோம். 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கார் விபத்தில் இருவர் பலி!

கொழும்பு, ஏப். 15
கார் ஒன்று வீதியைவிட்டு விலகி மரத்தில் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்துள்ளனர்.
பதுளை - பண்டாரவளை பிரதான வீதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இந்த விபத்து நடந்துள்ளது.
அத்துடன் விபத்தில் படுகாயமடைந்த இருவர் பதுளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் ஹாலி-எல பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)

## வீதி விபத்தில் இருவர் காயம்

யாழ்ப்பாணம், ஏப். 15
கோப்பாய், பூதர்மடத்தடியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற விபத்தில் இருவர் காயமடைந்துள்ளனர்.
முன்னாள் சென்றுகொண்டிருந்த மோட்டார் சைக்கிள் திடீரென வளைவில் திரும்பியபோது பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் விபத்து நிகழ்ந்துள்ளது.
விபத்து தொடர்பில் கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-17)

## மின்னல் தாக்கியதில் குடும்பஸ்தர் மரணம்

கொழும்பு, ஏப்.15
புத்தளம் - மஹகும்புக்கடவல, ஹோம்பஸ்வெவ பகுதியில் மின்னல் தாக்கத்துக்கு உள்ளாகி குடும்பஸ்தர் ஒருவர் நேற்றுமுன்தினம் மாலை உயிரிழந்துள்ளார்.
மஹகும்புக்கடவல , ஹோம்பஸ்வெவ பகுதியைச் சேர்ந்த 56 வயதான மூன்று பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். தனது விவசாய நிலத்தில்வேலைசெய்துகொண்டிருந்தபோதே இவர் மின்னல் தாக்கத்துக்குள்ளானார் . (எ)

## நீர்த்தாங்கி சரிந்து சிறுமி சாவு

கொழும்பு, ஏப்.15
ருஹுனுகம பிரதேசத்தில் தண்ணீர்த் தாங்கி கவிழ்ந்து வீழ்ந்ததில் 3 வயதுச் சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.
கழிவறையிலுள்ள தண்ணீர்த் தொட்டிக்குக் கீழே தண்ணீர்க் குழாயில் குளித்துக்கொண்டிருந்தபோது இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)




# ரணில் - மஹிந்த விரைவில் சந்திப்பு

கொழும்பு, ஏப். 15
**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், பொதுஜன பெரமுனக் கட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக்சவுக்கும் இடையிலான விசேட சந்திப்பொன்று அடுத்த வாரம் நடைபெறவுள்ளது.**

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பொதுத்தேர்தலை நடத்துமாறு பெரமுனவினர் முன்வைத்துள்ள கோரிக்கைக்கு ரணில் இணங்கவில்லை. அதேபோன்று, பெரமுனவின் பொதுவேட்பாளராக ரணிலைக் களமிறக்கும் முயற்சியில் தற்போது பின்னடைவு ஏற்பட்டுள்ளது. பொதுவேட்பாளராக ரணிலை அறிவிப்பது தொடர்பில் பொதுஜன பெரமுன இரண்டு குழுக்களாகப் பிளவடைந்து நிற்கின்றது. இவ்வாறானதொரு பின்னணியில் ஜனாதிபதி ரணிலுக்கும், மஹிந்தவுக்கும் இடையிலான சந்திப்பு பலத்த எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தியுள்ளது.
சந்திப்பின்போது, பெரமுனவின் முக்கியஸ்தரான பஸில் ராஜபக்ச உள்ளிட்ட வேறு சிலரும் கலந்துகொள்ளவுள்ளனர். சந்திப்பின் பின்னரே ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளர் தொடர்பில்பெரமுனவின் நிலைப்பாடு தெளிவாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-44)

## சுகாதார அமைச்சின் வாகனங்கள் மாயம்

கொழும்பு, ஏப். 15
சுகாதார அமைச்சுக்குச் சொந்தமான 679 வெவ்வேறு வாகனங்கள் போதிய தகவல்கள் இன்றி காணாமற்போயுள்ளன என்று தேசிய கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது.
சுகாதார அமைச்சின் வாகன முகாமைத்துவம் தொடர்பில் தேசிய கணக்காய்வு அலுவலகத்தால் மேற்கொள்ளப்பட்ட விசேட தணிக்கையில் இந்த விடயம் தெரியவந்துள்ளது.
அதில் 240 வாகனங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக கணக்காய்வுக்கு, சுகாதார அமைச்சு அறிவித்துள்ளபோதிலும் இதனை உறுதிப்படுத்தும் வகையில் போதிய தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.
ஏனைய 439 வாகனங்கள் தொடர்பில் நான்கு வருடங்களாக எந்தத் தகவலும் கண்டறியப்படவில்லை என்றும் கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது. (ச-இ)



## அதிவேக நெடுஞ்சாலையால் 3 நாள்களில் ரூ.126 மில்லியன்

கொழும்பு, ஏப். 15
புத்தாண்டை முன்னிட்டு கடந்த மூன்று நாள்களில் அதிவேக நெடுஞ்சாலைகள் மூலம் 126 மில்லியன் ரூபா வருமானம் கிடைத்துள்ளது என்று வீதி அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.
குறித்த காலப்பகுதியில் 3 இலட்சத்து 66 ஆயிரம் வாகனங்கள் நெடுஞ்சாலைகளில் பயணித்துள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## துர்க்காதேவி ஆலயத்தில் வருடப்பிறப்பு ஆராதனை

யாழ்ப்பாணம், ஏப். 15
வரலாற்றுப் பிரசித்திபெற்ற தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தில் குரோதி புதுவருடப்பிறப்பு உற்சவம் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. துர்க்கை அம்பாளுக்கு சிறப்புப் பூசை ஆராதனை வழிபாடுகள் நடைபெற்றன.
நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆலய துர்க்கா புஷ்கரணி தீர்த்தக் கேணியில் சங்கிராந்தித் தீர்த்த வழிபாடும் அம்பாள் வீதி உலா திருக்காட்சியும் அடியவர்கள் சூழ இடம்பெற்றன. (ச-66)





## மூளாய் வளர்மதி விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஏப். 15
மூளாய் வளர்மதி விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழா நேற்று மாலை 3 மணியளவில் கழகத்தின் மகளிர் அணியின் ஏற்பாட்டில் கழக மைதான வளாகத்தில் இடம்பெற்றது.
பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகள் உட்பட மெய்வல்லுநர் விளையாட்டுகளும் வெகு விமர்சையாக இடம்பெற்றன.
பிரதம விருந்தினராக நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் இலங்கை தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தருமான ஈஸ்வரபாதம் சரவணபவன் பங்கேற்றார். (ஒ-125)

## கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு சாவு

கொழும்பு, ஏப்.15
இரு குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். பலாங்கொடை - பெட்டிகலப் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் பெட்டிகலவத்தையைச் சேர்ந்த 32 வயதுடைய நபர் உயிரிழந்துள்ளார்.
சம்பவத்தில் காயமடைந்த மேலும் இருவர் இரத்தினபுரி மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் பலாங்கொடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டின் பின்னர் பணிப்புறக்கணிப்பு!

## தயாராகின்றன தொழிற்சங்கங்கள்

**கொழும்பு, ஏப்.15**

**தமிழ் - சிங்கள புத்தாண்டுக்குப் பின்னர் நாடு முழுவதும் வேலைநிறுத்தப் போராட்டங்களை முன்னெடுப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என்று தகவல் வெளியாகியுள்ளது.**

கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, கிராம அலுவலர் உள்ளிட்ட பல்வேறு அரச துறையை உள்ளடக்கிய தொழிற்சங்கங்களால் இந்த வேலைநிறுத்தப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வேலை நிறுத்த போராட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளது என்று இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் தெரிவித்துள்ளது. சம்பள முரண்பாட்டைத் தீர்த்தல், கல்விச் சுமையை பெற்றோரிடம் இருந்து அகற்றுதல், கற்றல் உபகரணங்களின் விலையைக் குறைத்தல், ஆசிரியர் மற்றும் அதிபர்களுக்கு பதவி உயர்வு வழங்குத்தல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அதேவேளை, சுகாதார அமைச்சு உறுதியளித்தபடி, சுகாதார சங்கங்களின் கொடுப்பனவு பிரச்சினைக்குத் தீர்வுகாண சுற்றறிக்கை வெளியிடப்பட வேண்டும் எனவும், அவ்வாறு இல்லாத நிலையில் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாகவும் சுகாதார தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தின் அரிசி விநியோக வேலைத்திட்டம் உள்ளூர் அரசியல்வாதிகளின் தலையீடு இன்றி முன்னெடுக்கப்படும் என ஜனாதிபதி உறுதியளிக்காவிட்டால், கிராம உத்தியோகத்தர்கள் அந்த வேலைத் திட்டத்திலிருந்து விலகிக்கொள்வதற்குத் தீர்மானித்துள்ளனர்.

இலங்கை போக்குவரத்துச்சபை ஊழியர்களின் நிலுவைத் தொகையை வழங்குவதாக எழுத்து மூலம் உறுதியளித்துள்ளபோதிலும் இதுவரை வழங்கப்படவில்லை எனவும், கொடுப்பனவுகள் வழங்கப்படாவிட்டால் தொழிற்சங்க நடவடிக்கையை ஆரம்பிக்க வேண்டியிருக்கும் என்றும் அகில இலங்கை போக்குவரத்து ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது. (எ-இ)

# போலிக் கடவுச்சீட்டு தம்பதியர் கைது!

கொழும்பு, ஏப். 15

போலிக் கடவுச்சீட்டைப் பயன்படுத்தி இலங்கைக்கு வர முயன்ற தம்பதியினர் சென்னை விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குடிவரவு, குடியகல்வு அதிகாரிகள் சோதனையிலேயே இருவரும் போலிக் கடவுச்சீட்டைப் பயன்படுத்தி பயணம் செய்தது தெரியவந்தது. இருவரும் இலங்கையைச் சேர்ந்தவர்கள். கடந்த சில ஆண்டுகளாக பெரம்பலூரில் இவர்கள் இந்திய ஆவணங்களைப் பெற்றிருந்தனர் என்பது கண்டறியப்பட்ட நிலையில் அவர்கள் கைதுசெய்யப்பட்டனர். (ச-இ)

# இஸ்ரேலில் பணி; 125 பேர் பயணம்

கொழும்பு, ஏப். 15

இஸ்ரேலில் நிர்மாணத்துறையில் பணிபுரியச் செல்லும் 125 பேர்கள் கொண்ட முதல் குழுவுக்கு தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்காரவால் விமான பயணச்சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளது.

இந்த முதலாவது குழு நேற்றுமுன்தினம் இஸ்ரேல் புறப்பட்டுச் சென்றுள்ளது. அபாயகரமான பகுதிகளில் வேலைகளை முறையாகக் கையாளாவிட்டால் எதிர்காலத்தில் அங்கு வேலைக்குச் செல்ல இருக்கும் 20 ஆயிரம் இலங்கையர்களைப் பாதிக்கும் என்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் தெரிவித்தார். (ச-இ)

# வயிற்றுக்குள் கொக்கேய்ன் மடகஸ்கார் பெண் கைது!

சுமார் 3 இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான 75 கொக்கேய்ன் மாத்திரைகளை விழுங்கி, வயிற்றினுள் மறைத்துக்கொண்டு வந்த மடகஸ்காரைச் சேர்ந்த வெளிநாட்டுப் பெண்ணொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவின் அதிகாரிகளால் அவர் கைதுசெய்யப்பட்டார். குறித்த பெண் விழுங்கிய கொக்கேய்ன் மாத்திரைகள் நீர்கொழும்பு மருத்துவமனையில் மருத்துவர்களால் அகற்றப்பட்டதையடுத்து மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ச-இ)

# ஹைஹ-ஏஸ் விபத்து!

யாழ்ப்பாணம், ஏப். 15

பருத்தித்துறை வீதி கோப்பாய் தெற்கில் நேற்று முன்தினம் ஹைஹ-ஏஸ் வாகனமொன்று குத்துக்கரணம் அடித்து விபத்துக்குள்ளாகியுள்ளது. விபத்தில் ஹைஹ-ஏஸ் சேதத்துக்குள்ளான நிலையில் வாகனத்திலிருந்தோர் சிறு காயங்களுடன் தெய்வாதீனமாகத் தப்பித்துக் கொண்டுள்ளனர். விபத்து தொடர்பில் கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-இ)

2,500 மில். ரூபா பெறுமதியான

# ஐஸ், ஹெரோய்ன் கடற்பரப்பில் மீட்பு!

கொழும்பு, ஏப். 15

தென் கடற்பரப்பில் இரண்டு படகுகளில் 200 கிலோகிராம் எடையுடைய ஐஸ் மற்றும் ஹெரோய்ன் போதைப்பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன. கடற்படையினருக்குக் கிடைக்கப்பெற்ற உளவுத் தகவல்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இந்தக் கடத்தல் முறியடிக்கப்பட்டது.

இதன்போது 6 இலங்கையர்கள் மற்றும் 4 வெளிநாட்டவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

மீட்கப்பட்ட போதைப்பொருள்களின் பெறுமதி சுமார் 2500 மில்லியன் ரூபாவென மதிப்பிடப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் காலி துறைமுகத்துக்கு அழைத்து வரப்பட்டு, பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ச-இ)

# தினம் தெரியுமோ?

**பிச்சைக்காரரின்ர புண்ணைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பியள். எல்லாருக்கும் காயம் வந்தால் அதை எப்பிடி மாத்தலாம் எண்டுதான் யோசிப்பம். ஆனால், பிச்சைக்காரருக்கு அப்பிடி புண் வந்தால், பெரிய லொத்தர் விழுந்த மாதிரி புளுகப்படுவினம், ஏனெண்டால் அது அவைக்கு முதலீடு. அந்தப் புண்ணைக்காட்டினால், வழக்கமாப் பிச்சை போடாதவைகூட 'ஐயோ பாவம்' எண்டு காசு போடுவினம். அதால அந்தப் புண்ணை வைச்சு எவ்வளவு காசு வாங்கமுடியுமோ அவ்வளவுக்கு பிச்சைக்காரர் அந்தப்புண்ணை மாறவிடாமல் பாப்பினம். உந்தப் பிச்சைக்காரப் புண் மாதிரி எங்களில சிலர் மற்றவையின்ர அனுதாபத்தைத் தங்கட முதலீடாக்கி லாபம் பாக்கிறவை. லாபம் எண்டால் தனிய காசு மட்டும்தான் லாபம் எண்டு நினைக்கக்கூடாது. ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு ஆசை. அதை நிறைவேற்ற இப்பிடி அனுதாப அலையில நீந்தி விளையாடுவினம். கூடுதலா அரசியல்வாதியள் தான் உந்த விசயத்தில விண்ணர்.**

**உப்பிடி அனுதாப அலையில பப்ளிசிட்டிதேட வெளிக்கிடுறவை எங்களுக்க கனபேர் இருக்கினம். கிட்டடியில ஒரு புத்தகவெளியீடு நடந்தது. இயக்கத்தின்ர சண்டையைப் பற்றி எழுதுப்பட்ட புத்தகம் அது. அந்தப் புத்தகம் எழுதின ஆளையும், அதைப் புத்தகமாக்க முன்னுக்கு நிண்டு வேலை செய்த ஆக்களையும் ரி.ஐ.டிக்காரர் விசாரிச்சவை. ஆனால் அந்த விசயம் வெளியாலவரேலை. ஏனெண்டால் அவைக்கு உண்மையாகவே பிரச்சினை. பிறகு அதை வெளியில கசியவிட்டால் இன்னும் தங்களுக்குப் பிரச்சினை எண்டதால அவை தாங்கள் விசாரிக்கப்பட்டதை வெளிப்படுத்தேலை. ஆனால், அந்தப் புத்தக வெளியீட்டு விழாவை ஒழுங்கு செய்த அமைப்பைச் சேர்ந்த ஆக்கள் சிலரை ரி.ஐ.டிக்காரர் விசாரிச்சது பேப்பர் களிலையும், நெற்றுகளிலையும் வந்தது. இப்பிடி விசாரிக்கப்படுறவைக்கு பிறகும் சிக்கல் வரக்கூடாது எண்டதுக்காக அவையின்ர பேர், விவரத்தை சில மீடியாக்கள் போடேலை. உடன அந்த விசாரணைக்குப் போன எழுத்தாளர் ஒருத்தருக்கு கடும் கோபம் வந்திட்டாம்.**

**'என்ர பேரை வெட்டிப்போட்டு நியூஸைப் போட்டிட்டினம்' எண்டு பேஸ்புக்கில ஆள் பெரும் ஒப்பாரி. ஆனால் அதுக்கு கீழ அவருக்கு கருத்துப் போட்ட கனபேர் 'ஏன் தம்பி, அப்ப பேப்பரில பேர் வரவேணுமெண்டோ விசாரணைக்கு போனனியள்?' எண்டு 'கரடியே காறித்துப்பின மொமண் டில' கேக்கத் துவங்கிட்டினம். அப்பிடி பேர் போட்டால் அவருக்கு என்ன லாபம்? எண்டு நீங்களும் யோசிக்கலாம். பிச்சைக்காரப் புண் மாதிரி 'நானும் ரவுடிதான், என்னையும் விசாரிக்கிறாங்கள்' எண்ட கணக்கில அழுது புலம்பினால் வெளிநாட்டுக்காரர் ஏதும் அனுப்புவினமெல்லோ. அதைவிட கனடாவுக்கோ, லண்டனுக்கோ பறந்துபோய் 'என்னை விசாரிக்கிறாங்கள், கேஸ் போடுறாங்கள்' எண்டு செட்டிலாகலாம். அதைவிட போட்டோவோட செய்தி வந்தால் சனத்திட்ட பேமஸாகலாம். இப்பிடி நிறைய லாபக்கணக்கு இருக்கு.**

**அதைவிட பகிடி என்னெண்டால்'எனக்கு பேர் புகழுக்கு ஆசை இல்லை' எண்டு சொல்லுற அதே எழுத் தாளர், தன்னை ரி.ஐ.டிக்காரர் விசாரிச்சவை எண்ட செய்தியை தானேஎழுதி, அதுக்கு என்ன போட்டோ போடோணுமெண்டும் இணைச்சு எல்லா மீடியாவுக்கும் அனுப்பி, போனில கெஞ்சிக்கூத்தாடி அதைப் போடவைக் கிறார் எண்டதுதான். தேசியம் எண்டது கனபேருக்கு தெய்வம் மாதிரி. எந்த லாபமுமில்லாமல் ஆராதிப்பினம். இன்னும் சிலருக்கோ தேசியம் எண்டது தேசிக்காயில செய்யிற ஊறுகாய் மாதிரி. தங்கட அலுவலுக்கு மட்டும் தேசியத்தை பாவிக்கிறதில வலுவிண்ணர். அப்பிடி விசாரணையளைக்கூட லாபமாக்க ஒரு கூட்டம் வெளிக் கிட்டிருக்கு, கொஞ்சம் விழிப்போடதான் இருக்கோணும் கண்டியளோ.**

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5 ஆவது தமிழியல் மாநாட்டுக்கு ஆய்வுக்கட்டுரைகள் கோரல்

**யாழ்ப்பாணம், ஏப். 15**

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆய்வரங்கின் பகுதியாக தமிழ்த்துறை நடத்தும் ஐந்தாவது அனைத்துலகத் தமிழியல் மாநாடு ஆவணி மாதம் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. அதனையொட்டி ஆய்வாளர்களிடமிருந்து ஆய்வுக்கட்டுரைகள் கோரப்பட்டுள்ளன.**

ஆய்வுக்கட்டுரை சொந்த முயற்சியாக இருப்பதுடன் வேறெங்கும் பிரசுரிக்கப்படாததாகக் கணினி அச்சில் பாமினி எழுத்துருவில் அமையவேண்டும்.

தலைப்பு 4 ஆகவும் ஆய்வுச் சுருக்கம் 10 ஆகவும் கட்டுரை 12 ஆகவும் வரிகளின் இடைவெளி 1.5 ஆகவும் எழுத்துக்களின் அளவை நிர்ணயித்து ஏ-4 இல் 10 தாள்களுக்கு மேற்படாது அனுப்பப்படவேண்டும்.

ஆய்வாளர் ஆய்வுத் தலைப்பு மற்றும் ஆய்வுச் சுருக்கத்தை ict2023tamil@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு எதிர்வரும் மே 25ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைத்தல் வேண்டும். தலைப்பு தொடர்பிலான ஒப்புதல் கிடைத்தபின்னர் முழுமையான கட்டுரையை ஜூன் 20ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பலாம்.

கட்டுரையாளர்களுக்கான பதிவுக்காலம் எதிர்வரும் ஜூலை 11ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரையாகும்.

உள்ளூர்ஆய்வாளர்கள்4ஆயிரம் ரூபாவும் பட்டப்படிப்பை மேற்கொள்ளும் உள்நாட்டு மாணவர்கள் ஆயிரம் ரூபாவும் வெளிநாட்டு ஆய்வாளர்கள் 50 அமெரிக்க டொலரும் செலுத்தி பதிவுகளை மேற்கொள்ளலாம். கட்டணத்தை நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்னும் பெயருக்கு மக்கள் வங்கியின் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கிளையின் 162-1-003-1-0000891 கணக்கிலக்கத்துக்கு வைப்புச் செய்யலாம்.

வங்கியில் பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் நகலை ict2023 tamil@gmail.com என்னும் மின்னஞ்சல் முகவரிக்கும், மூலப்பிரதியைத் தலைவர், தமிழ்த்துறை. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை என்னும் முகவரிக்கும் தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ கிடைக்கக் கூடியவாறு அனுப்பிவைக்கவும் என்றும் ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (ச)

## சதுரங்கச் சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், ஏப். 15

இணுவில் பொதுநூலக சனசமூக நிலையத்தின் ஆண்டுவிழாவை முன்னிட்டு, லம்போதரா விளையாட்டுக்கழகத்தின் மாபெரும் சதுரங்கச் சுற்றுப்போட்டி, இணுவில் பொதுநூலக மண்டபத்தில் எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

6 வயது முதல் 17 வயது வரையான பாடசாலை மாணவர்களுக்குப் பிரிவு ரீதியாகவும், 17 வயதுக்கு மேற்பட்டவர்களுக்குத் திறந்த போட்டியாகவும் இருபாலாருக்கும் போட்டிகள் நடைபெறும்.

இந்தப் போட்டிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தமது சுயவிவரக் கோவை அடங்கிய விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து, நாளை 16 ஆம் திகதி செவ்வாய்க் கிழமைக்கு முன்னர் இணுவில் பொது நூலகத்தில் ஒப்படைக்க வேண்டும் என்று போட்டியின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ப-66)

## ‘வெண்பாமாலை’ நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஏப். 15

வயலூரன் எழுதிய ‘வெண்பாமாலை’ வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கொடிகாமம் நட்சத்திர மஹால் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

வே.தபேந்திரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் நூல் வெளியீட்டுரை, நயப்புரை ஆகியவற்றை யாழ். பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா நிகழ்த்தவுள்ளார்.


நூலின் முதற் பிரதியை தொழிலதிபர் மு. பிரசன்னாவும் இணைப்பிரதிகளை வி.மயூரன், ந.கஜேந்திரன் ஆகியோரும் பெறவுள்ளனர். (ச-9)

## திறன் விருத்தி காட்சிக் களம்

யாழ்ப்பாணம், ஏப். 15

‘விழிகள் செய்யும் விந்தையை விரல்கள் செய்யக் காண்பீர்கள்’ எனும் தொனிப்பொருளில், பார்வையற்றோருக்கான அறக்கட்டளை நிலையம் முன்னெடுத்துள்ள மாபெரும் திறன் விருத்திக் காட்சிக் களம், யாழ்.மத்திய கல்லூரிக்கு அருகிலுள்ள தந்தை செல்வா கலையரங்கில் இன்று திங்கட்கிழமையும், நாளை செவ்வாய்க்கிழமையும் காலை 8.30 முதல் மாலை 4.30 வரை இடம்பெறவுள்ளது. (ப)





அராலி ‘வின் ஸ்ரார்’ இளைஞர் கழகம் மற்றும் முத்தமிழ் கல்வி முன்னேற்றக் கழகம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் தமிழ் – சிங்களப் புத் தாண்டு விழா நேற்று ஞாயிற்றுக்கிழமை முத்தமிழ் சனசமூக நிலையத்தில் நடைபெற்றது. (ச-27)

## வருடாந்த கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 15

தென்மராட்சி பழ உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச் சங்கத்தின், வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய இயக்குநர் சபைத் தெரிவும், சங்கத் தலைவர் சி.ஜெயசங்கர் தலைமையில் சங்க மண்டபத்தில் எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை பி.ப.1 மணிக்கு நடைபெறவுள்ளன.

சங்கத்தின் பொதுச் சபை உறுப்பினர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு செயலாளர் செ.ஜயச்சந்திரன் அறிவித்துள்ளார்.

## அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், ஏப்.15

இருபாலை கிழக்கு, கோப்பாய் - மானம்புலம் அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 12 நாள்கள் இடம்பெற்று எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நிறைவடையும்.

உற்சவத்தில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஆலய பரிபாலனசபையினர் கேட்டுள்ளனர். (ப)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உற்சாகமாகச் செயற்படும் நாள். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். சிலருக்கு அவ்வப்போது சிறுசிறு சலனங்கள் ஏற்பட்டு நீங்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். விற்பனை அதிகரிக்கும்.

**இடபம்:** புதிய முயற்சிகளில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. சிலருக்கு சங்கடங்கள் ஏற்படக்கூடும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். உங்கள் முயற்சிக்கு ஒத்துழைப்பு கிடைக்கும். பணிச்சுமை அதிகரிக்கலாம்.

**மிதுனம்:** இறையருள் நிறைந்த நாளாக இருக்கும். மகிழ்ச்சி தரும் சம்பவம் நடைபெறும். உற்சாகம் உங்களைத் தொற்றிக்கொள்ளும். சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். காரியம் அனுகூலமாக முடியும். பிணக்குகள் நீங்கும்.

**கடகம்:** திடீர்ச் செலவுகள் அதிகரிக்கும் நாள். சிலருக்கு தாய்வழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். மகிழ்ச்சியான செய்தி கிடைக்கும். எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. உதவி கிடைக்கும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். காரியங்கள் அனுகூலமாகும். மகிழ்ச்சி உண்டாகும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும். வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் உற்சாகமாகச் செயற்படுவார்கள்.

**கன்னி:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். பெரியவர்களின் ஆலோசனை அவசியம். காரியம் சாதகமாக முடியும். பேசும்போது நிதானம் அவசியம்.

**துலாம்:** உறவினர்கள் வருகையால் திடீர்ச் செலவுகள் ஏற்படும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. உடல் ஆரோக்கியம் மேம்படும். துணிச்சலுடன் முடிவு எடுக்கும் திறன் அதிகரிக்கும். சக வியாபாரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும்.

**விருச்சிகம் :** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது.எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் மறையும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**தனுசு:** பதற்றம் தவிர்த்து எதிலும் நிதானமாகச் செயற்படவும். உறவுகளால் செலவுகள் ஏற்படக் கூடும். வீண் சச்சரவுகள் ஏற்படும். குடும்பத்து டன் வீட்டில் தெய்வ வழிபாடு செய்வீர்கள். கருத்து

**மகரம்:** தொடங்கும் காரியங்கள் வெற்றி பெறும். தேவையான பணம் கிடைக்கும். ஆதாயம் கிடைக்கும். சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டுநீங்கும். கூடுதல் உழைப்பு தேவைப்படும். செலவுகள் ஏற்படும். வைரவரை வழிபடுவது நலம் சேர்க்கும்.

**கும்பம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உடல்நலனில் கவனம் தேவை. தேவையற்ற அலைச்சலும் ஏற்படும். மனதில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**மீனம்:** புதிய முடிவுகளைத் துணிந்து எடுப்பீர்கள். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும் . உடல் நலனில் கவனம் தேவை. சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். விற்பனை எதிர்பார்த்தபடி இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்




## வளர்கின்றதா ரூபா?

உலகில் மிகவும் வேகமாக வளர்ந்துவரும் நாணயப் பெறுமதியாக இலங்கை ரூபா அடையாளப்படுத்தப்பட்டிருக்கின்றது. கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் 'நூலறுந்த பட்டம்போன்று' அங்கும் இங்குமாக அந்தரத்தில் அல்லாடித் திரிந்த ரூபாவின் பெறுமதி, சர்வதேச நாணய அலகுகளுக்கு நிகர்நின்று - தளம் பலற்று - வளர்ச்சியடைவதென்பது பாராட்டப்பட வேண்டியதே. மூன்று ஆண்டுகளுக்கு முன்னரும், அதற்கு அண்டிய அரகலய போராட்டக் காலப்பகுதியிலும் கட்டுக்கட்டாகப் பணத்தைக் கொண்டு சென்று, காகிதப் பைகளுக்குள் பொருள்களை வாங்கிவரும் சிம்பாப்வேயின் இழிநிலையை நோக்கி இலங்கை பயணிக்கின்றது என்று பலரும் எச்சரித்தனர். அத்தகைய நிலைக்கு அருகில் இலங்கை சென்றிருந்தாலும், இன்று அந்த ஆபத்திலிருந்து சற்றேனும் இந்தத் தீவு மீண்டுவிட்டது என்பது வெளிப்படையானதே. சிம்பாப்வேயின் டொலர், பாகிஸ்தானின் ரூபா, மாலைதீவின் ரூபியா என்பவையும் இலங்கையின் ரூபா அதலபாதாளத்தில் வீழ்ந்த சமகாலத்தில் பலமிழந்த - மதிப்பிழந்த நாணயப் பெறுமதிகள்தான். கிணற்றில் வீசிய கல்போன்று அந்த நாணயப் பெறுமதிகள் இன்னமும் வீழ்ந்த இடத்திலேயே அசையாதிருக்கையில், இலங்கை ஒப்பீட்டளவில் ஒருபடி முன்னேறியிருக்கின்றது என்பது உண்மையே.

ஆனால், இந்த மீட்சியும் வளர்ச்சியும் நிலையானதா என்ற கேள்வியும் எழவே செய்கின்றது. இலங்கை பொருளாதாரத்தில் நலிவடைந்த காலத்தில் ஆபத்பாந்தவனாகக் கரம்கொடுத்தது இந்தியா. நாணய நிதியமும் தன் கதவுகளைத் திறந்துவிட இலங்கை தன் டொலர் இருப்பைப் பேணியது. வாகன இறக்குமதித் தடைபோன்ற கொள்கைகளால் டொலரின் வெளிச்செல்கையையும் இலங்கை கண்காணித்தது-கட்டுப்படுத்தியது. 'முன்னொரு நாள் விதை பின்னொரு நாள் மரமாவதைப் போன்று' இரு வருடங்களுக்கு முற்பட்ட திட்டங்கள் மற்றும் கட்டுப்பாடுகளாலும், சர்வதேச நாணய நிதியத்தின் கடன் மறுசீரமைப்பாலும்தான் இன்று இலங்கை ரூபா பலம்பெற்றிருக்கின்றதே அன்றி, இவற்றுக்கு அப்பாற்பட்ட செயற்றிட்டங்களாக என்னதான் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்று கேட்டால், அதற்குரிய பதிலுக்கும் தொலைநோக்குச் செயற்றிட்டங்களுக்கும் கிஞ்சித்தும் தொடர்பில்லை என்பது புரியும் - தெளியும்.

இலங்கைக்கு இன்று தேவைப்படுவது, டொலரின் இருப்பை வெளிவிடாமல் இறுகப்பற்றியிருக்கும் 'கஞ்சத்தனம் அல்ல'. இந்தப் புரிதல் அடிப்படையானது. ஒரு நாடு பொருளாதாரத்தில் பலப்பட வேண்டுமாயின், தன் நாணய அலகை உயர்த்திக்கொள்ள வேண்டுமாயின் 'டொலரின் ஈட்டுகையை' உறுதிப்படுத்த வேண்டும். இலங்கை செய்யத்தவறும் விடயமும் இதுவே. தேயிலை, சுற்றுலா மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் இவை மூன்றும்தான் இலங்கைக்குள் டொலரின் வருகையைப் பிரதானமாகத் தீர்மானித்துக் கொண்டிருக்கும் காரணிகளாக அமைந்திருக்கின்றன. மீன்பிடி, விவசாயம், கால்நடை வளர்ப்பு, தெங்கு என இலங்கையின் பொருளாதார நிலைக்களன்களாகத் திகழ்கின்ற விடயங்களில் ஒருவித எதிர்காலமற்ற தன்மையையே இலங்கை கொண்டிருக்கின்றது. இந்தத் தொழிற்றுறைகளை வளப்படுத்தி டொலரின் ஈட்டுகைக்கான வாய்ப்புகளைப் பரவலாக்குகின்ற பட்சத்தில்தான் இலங்கையின் ரூபா 'எந்தப் பிடிமானமும் இன்றி' தலைநிமிரும். நாணய நிதியத்தின் கடன்கள் இலவசங்கள் அல்ல. நாணய நிதியமும் ஜப்பானும் இணைந்து மேற்கொள்ளும் கடன் மறுசீரமைப்புகள் தள்ளுபடிகளல்ல. இவை என்றோவொரு காலத்தில் திரும்பிச் செலுத்தப்பட வேண்டியவைதான். அவற்றின் கால அவகாசங்கள் குறுகுகின்றபோது இலங்கை ரூபாவின் பெறுமதி குறுகும். அவற்றின் கால அவகாசங்கள் விரிகின்றபோது இலங்கை ரூபாவின் பெறுமதி விரியும்...!






## ஐக்கிய மக்கள் சக்தியை வளைக்க முடியவில்லை!

### ரணிலின் முயற்சிகள் தோல்வியா?

கொழும்பு, ஏப். 15

**ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி.க்களை தம்பக்கம் வளைத்துப்போடும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் முயற்சி இன்னும் வெற்றியளிக்கவில்லை என கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**

ஜனாதிபதித் தேர்தலில் தனது இருப்பைப் பலப்படுத்துவதற்காக ஐக்கிய மக்கள் சக்தியின் 17 நாடாளுமன்ற உறுப்பினர்களை தனது பக்கமாக இழுத்துப்போடுவதற்கு ஜனாதிபதி ரணில் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார் என்று அண்மையில் செய்தி வெளியாகியிருந்தது. இந்த நிலையிலேயே ஜனாதிபதி ரணிலின் இந்த முயற்சிகள் வெற்றி பெறவில்லை என்று கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குறித்த நபர்களை ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினத்துக்கு மேடையேற்றும் நோக்கிலேயே நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டுவந்தன. எனினும், ஓரிருவர் மாத்திரமே ஜனாதிபதி ரணிலுக்கான தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளனர். எதிரணி உறுப்பினர்களின் ஆதரவைப் பெறும் முயற்சியில் வஜிர அபேவர்தன, சாகல ரத்நாயக்க, ரவி கருணாநாயக்க ஆகியோர் ஈடுபட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-44)

## இலங்கையருக்கு பைடன் வாழ்த்து

கொழும்பு, ஏப். 15

இலங்கையில் கொண்டாடப்படும் தமிழ் - சிங்கள புத்தாண்டை முன்னிட்டு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

தனது ருவிற்றர் பதிவில் அமெரிக்க ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

தாமும் தமது பாரியார் ஜில் பைடனும் தமிழ் - சிங்கள புத்தாண்டு வாழ்த்தைத் தெரிவித்துக்கொள்வதாக பைடன் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## அதிக செயற்றிறனாக இலங்கை ரூபா

2024 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில், உலகில் வளர்ந்துவரும் சந்தைகளில் இலங்கை ரூபா அதிக செயற்றிறன் கொண்ட நாணயமாகப் பதிவாகியுள்ளது.

'ப்ளூம்பெர்க்' சந்தை தரவுகளின் அடிப்படையில், ஆண்டின் தொடக்கத்துடன் ஒப்பிடுகையில் ஏழு வீதத்துக்கும் அதிகமான வளர்ச்சியை இலங்கை ரூபா எட்டியுள்ளது என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ச-இ)

## மியான்மரில் சிக்கிய இலங்கையர் மீட்பு!

கொழும்பு, ஏப். 15

மியான்மரில் சைபர் கிரைம் முகாமில் இருந்து மீட்கப்பட்ட 8 இலங்கையர்களும் அடுத்த வாரத்துக்குள் தாயகம் அனுப்பப்படுவார்கள் என தாய்லாந்திலுள்ள இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது.

மீட்கப்பட்ட இலங்கையர்கள் பாங்கொக்கிலுள்ள விடுதியில் பாதுகாப்பாகத் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்றும் தூதரகத்தின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ச-இ)



## ஜனாதிபதித் தேர்தலே முதலில் நடத்தப்படும்

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பொதுத்தேர்தலை பெறுவதற்கான முயற்சி வெற்றியளிக்காது என நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பொதுத்தேர்தல் நடத்தப்படவேண்டும் என்பதே பெரமுனவின் கருத்தாக உள்ளது. சிலர் இரண்டு தேர்தல்களையும் சம நேரத்தில் நடத்தவேண்டும் என்றும் வலியுறுத்தி வருகின்றனர். இவ்வாறானதொரு பின்னணியிலேயே, ஜனாதிபதித் தேர்தலே முதலில் நடத்தப்படும் என்று தெரிவித்துள்ளார் எஸ்.பி.திஸாநாயக்க. (ம-44)

### நாளை

16.04.2024

**செவ்வாய்க்கிழமை**

**சித்திரை 03**

சுபநேரம்: 03.04 - 04.34

ராகுகாலம் : 10.34 - 12.04

### நாளொரு நல்வார்த்தை

**வன்முறை என்பது மோசமானது. ஆனால், அடிமைத்தனம் வன்முறையைக் காட்டிலும் மோசமானது.**

**– சுபாஷ் சந்திரபோஸ்–**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இஸ்ரேல் மீது ஈரான் சரமாரித் தாக்குதல்!

## மத்திய கிழக்கில் பதற்றம்

## பதிலடிக்கு இஸ்ரேலும் தயார்

டெல்அவிவ், ஏப். 15

**இஸ்ரேலின் மீது நேற்று சரமாரியான வான் தாக்குதல்களை ஈரான் மேற்கொண்டுள்ளது. இந்தத் தாக்குதல்களில் இஸ்ரேலின் தென்பகுதி இராணுவத் தளங்கள் அழிக்கப்பட்டுள்ளன என்று இஸ்ரேல் ஒப்புக் கொண்டுள்ளது.**

சிரியத் தலைநகர் டமஸ்கஸில் உள்ள ஈரானியத் தூதரகத்துக்கு அருகாக கடந்தவாரம் இஸ்ரேல் தாக்குதலை நடத்தியது. இந்தத் தாக்குதலில் ஈரானின் இரண்டாம் நிலை போர்த் தந்திரி மற்றும் இராணுவத் தளபதிகள் உள்ளிட்ட 13 பேர் கொல்லப்பட்டனர். இதற்குப் பதிலடியாகவே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

சுமார் 200க்கும் மேற்பட்ட ஏவுகணைகளால் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் அவற்றில் பல ஏவுகணைகள் வானில் வைத்து செயலிழக்கச் செய்யப்பட்டதாகவும் இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலின் மீதான தாக்குதலைக் கணிசமான அளவு முறியடிப்பதற்கு அனைத்து ஒத்துழைப்புகளையும் வழங்கியதாகவும், இஸ்ரேலின் பாதுகாப்புக்கு உரிய அத்தனை நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்று அமெரிக்காவும் அறிவித்துள்ளது. (ம)



# ஈரானின் தாக்குதல்; பைடன் ஆலோசனை

வொஷிங்டன், ஏப். 15

மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலைமைகளைத் தொடர்ந்து, அதிபர் பைடன் வெள்ளை மாளிகையில் நீண்டநேரம் ஆலோசனை நடத்தியுள்ளார்.

இஸ்ரேல் மீதான தாக்குதல்களை ஈரான் ஆரம்பித்து சில நிமிடங்களில் இந்த உயர்மட்ட பாதுகாப்புக் கூட்டத்தை பைடன் கூட்டியுள்ளார் என்றும் அதில் முக்கியமான சில முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

இஸ்ரேலைப் பாதுகாப்பதற்காக அமெரிக்கா மேற்கொண்டுவரும் தலையீட்டுக்குக் கடும் கண்டனம் தெரிவித்துள்ள ஈரான், இந்த விடயத்தில் அமெரிக்கத் தலையீடு தேவையற்றது என்றும் அமெரிக்கா விலகியிருப்பது அனைவருக்கும் நல்லது எனவும் எச்சரித்துள்ளது. இதே வேளை- தான் ஜனாதிபதியாக இருந்திருந்தால் மத்திய கிழக்கில் இந்தப் பதற்றம் ஏற்பட்டிருக்காது என்று ட்ரம்ப் தெரிவித்துள்ளார். (ம)

# அமைதிப் பேச்சு சாத்தியமில்லை!

மொஸ்கோ, ஏப். 15

உக்ரைனுடனான அமைதிப் பேச்சை முன்னெடுப்பதற்குச் சாத்தியமில்லை என்று கிரம்ளின் அறிவித்துள்ளது.

கடந்த இரண்டு வருடங்களாக உக்ரைனுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே கடும் மோதல் இடம்பெற்று வரும் நிலையில், உக்ரைனுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே அமைதியை ஏற்படுத்துவதற்குப் பல்வேறுபட்ட முயற்சிகளை சுவிட்ஸர்லாந்து மேற்கொண்டுள்ளது. ஜூன் மாதம் 15 மற்றும் 16ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ள இந்த அமைதி மாநாடு ரஷ்ய - உக்ரைன் மோதலை முடிவுக்குக் கொண்டுவரும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், உக்ரைனில் அமைதிதிரும்புவதற்கான சாத்தியங்கள் குறைவு என்று ரஷ்யா தெரிவித்துள்ளது.

சுவிட்ஸர்லாந்தில் நடைபெறும் அமைதிப் பேச்சுக்கு ரஷ்யா அழைக்கப்படவில்லை. ரஷ்யாவின் கோரிக்கைகள் முன்வைக்கப்படாத உயர்மட்டக் கூட்டத்தில் எடுக்கப்படும் தீர்மானங்கள் ரஷ்யாவின் நலனைப் பிரதிபலிப்பதாக அமையும் என்று ரஷ்யா நம்பவில்லை எனவும் கிரம்ளின் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளது. (ம)

# இராமர் கோவில் விழாவில் முர்முவுக்கு பாகுபாடு!

அயோத்தி இராமர் கோயில் திறப்பு விழாவில், இந்தியக் குடியரசுத் தலைவர் முர்மு கலந்துகொள்ளவில்லை. பழங்குடியினப் பெண் என்பதால் அவர் புறக்கணிக்கப்பட்டார் என்று ராகுல்காந்தி குற்றஞ்சாட்டியுள்ளார்.

மக்களவைத் தேர்தலுக்காகத் தீவிர பரப்புரை நடவடிக்கையில் ராகுல் காந்தி ஈடுபட்டு வருகின்றார். சதீஸ்கர் மாநிலத்தில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பரப்புரையின்போதே ராகுல்காந்தி இவ்வாறானதொரு குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

குடியரசுத்தலைவர் திரௌபதி முர்மு பழங்குடியினராக இருப்பதால் அயோத்தி பால இராமர் கோயில் கும்பாபிஷேகத்தில் பங்கேற்கவிடாமல் பா.ஜ.க.வினரால் தடுக்கப்பட்டார். பழங்குடி மக்களை நாம் ஆதிவாசி என்று பன்னெடுங்காலமாக அழைத்துவருகிறோம். ஆனால், ஆதிவாசி என்ற வார்த்தையை மாற்ற பிரதமர் நரேந்திரமோடி முயன்று வருகிறார்.

ஆதிவாசி என்றால் நீர், வனம், நிலத்தின்மீது உரிமை உள்ளவர்கள் என்று அர்த்தம். ஆனால், வனவாசி என்றால் காட்டில் மட்டுமே வசிப்பவர்கள் என்று அர்த்தமாகிறது - என்றார். (ம)

# 9 பொதுமக்கள் சுட்டுக்கொலை


*பாகிஸ்தானில் பயங்கரம்*

இஸ்லாமபாத், ஏப். 15

பாகிஸ்தானில் பேருந்தொன்றிலிருந்து கடத்திச் செல்லப்பட்ட 9 பேர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

பலுசிஸ்தான் மாகாணத்திலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. பலூசிஸ்தானில் அண்மைக்காலமாக தொடர்ச்சியாகப் பயங்கரவாதத் தாக்குதல்கள் இடம்பெற்றுவந்த நிலையில், இந்தத் தாக்குதலின் பின்னணியும் பயங்கரவாதக் குழுக்களின் செயலாக இருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# 400 தொகுதிகளில் தாமரை மலரும்



புதுடில்லி, ஏப். 15

மக்களவைத் தேர்தலில் நாடுமுழுவதும் 400 தொகுதிகளுக்கு மேல் பா.ஜ.க. வெற்றிபெறும் என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தெரிவித்தார்.

தமிழகத்தில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும் போதே, 400 தொகுதிகள் என்ற இமாலய இலக்கே பா.ஜ.க.வின் திட்டம் என்று அமித் ஷா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேர்தலுக்காக 'இண்டியா' கூட்டணியினர் நாடுமுழுவதும் பிரதமர் மோடியை பலவிதமாக விமர்சனம் செய்து வருகின்றனர். மோடியை விமர்சனம் செய்வதன் மூலம் பா.ஜ.க.வுக்கு ஆதரவாகத்தான் அவர்கள் செயற்படுகின்றனர்.


சனாதன தர்மத்தையும், அயோத்தியில் இராமர் கோயில் கட்டியதையும் தி.மு.க.வினர் கேவலமாகவும், அலட்சியமாகவும் பேசி, கோடிக்கணக்கான மக்களை காயப்படுத்தினார்கள். அப்படியிருந்தும் நாம் அனைவரையும் நம்மோடு இணைத்துக் கொண்டு, வளர்ச்சியை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கிறோம்- என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆரோக்கிய உணவகம் திறந்துவைப்பு

குறிகாட்டுவான் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட சமுர்த்தி ஆரோக்கிய உணவகத்தின் திறப்பு விழா வேலணைப் பிரதேச செயலர் க. சிவகரன் தலைமையில் கடந்த புதன்கிழமை நடைபெற்றது.
நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதமவிருந்தினராகவும், சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்கள மேலதிக பணிப்பாளர் நாயகம் சி.சத்திய சீலன், யாழ்.மாவட்டச் சமுர்த்திப் பணிப்பாளர் எவ்.சி. சத்தியசோதி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொண்டனர். (எ-66)



வரலாற்றுப் பிரசித்திபெற்ற மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்துக்கென புதிதாக அமைக்கப்பட்ட சப்பர வெள்ளோட்டம் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. (ப-66)

கொழும்பு கொச்சிக்கடை வெக்காளி அம்மன் கோவில் தேர்த் திருவிழா கடந்த வியாழக்கிழமை பக்தர்கள் புடைசூழ வெகு சிறப்பாக இடம்பெற்றுள்ளது. (எ-100)








கிளிநொச்சி மாவட்டத்தில் பொது இடங்களில் குப்பைகள் கொட்டுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என வலியுறுத்தி, 'நாம் சுற்றாடலைப் பாதுகாப்போம்' எனும் தொனிப்பொருளில், பொலிஸார் பதாகைகளைக் காட்சிப்படுத்தி எச்சரிக்கை விடுத்து வருகின்றனர். (ப-113)

சிறுதொழில் முயற்சியாளர்களுக்கான சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் முகமாக காரைநகர் பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களமும், சிறுதொழில் அபிவிருத்திப் பிரிவும் இணைந்து முன்னெடுத்த, புத்தாண்டுக் கண்காட்சியும் விற்பனைச் சந்தை நிகழ்வும், காரைநகர் பிரதேச செயலக வளாகத்தில் கடந்த புதன்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெற்றது. சமுர்த்தி முகாமையாளர் தே.விக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், காரைநகர் பிரதேச செயலர் ந.ரஞ்சனா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். (ப-66)



கொழும்புத்துறைமேற்கு விநாயகர் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட தெற்கு அலங்கார நுழைவாயில் மற்றும் அன்னதான மண்டபம் அண்மையில் திறந்துவைக்கப்பட்டது. (ச-17)



திருநெல்வேலி அரசடி ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவப் பெருவிழா, கடந்த செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. (ப-66)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு , கொக்குவில் பொற்பதி இந்து விளையாட்டுக்கழகம் முன்னெடுத்த, குருதிக் கொடை நிகழ்வு, கொக்குவில் பொற்பதி அறிவாலய மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. (ப-66)


இன்று 60 ஆவது அகவைகாணும்
எமது ஆசானுக்கு மணிவிழா வாழ்த்தும் சேவைநலன் பாராட்டும்



செல்வி
**ஐயாத்துரை அற்புதமலர்**
(B.A, PGDE )
சிரேஸ்ட ஆசிரியர்
யா/ கரம்பை அ.மி.த.க. பாடசாலை

சேவை விபரம்:
- 07.01.2009 - 26.09.2010 யா/ மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம்
- 27.09.2010 - 23.01.2013 மு/ விசுவமடு மகாவித்தியாலயம்
- 24.01.2013 - 05.04.2018 மு/ விசுவநாதர் ஆரம்ப பாடசாலை
- 06.04.2018 - 14.04.2024 யா/ கரம்பை அ.மி.த.க.பாடசாலை நாவற்காடு, வரணி.

**ஆசிரியப் பணியில் உயர்வுபெற்று 14.04.2024 இல் இருந்து ஓய்வுபெற்ற**
தங்கள் ஓய்வுக்காலம் சிறந்தோங்கி நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
பாடசாலை சமூகம்
**யா/ கரம்பை அ.மி.த.க. பாடசாலை நாவற்காடு, வரணி.**
(cs.54656) (N-1)



# மரண அறிவித்தல்

பிறப்பு 09 . 02 . 1949



இறப்பு 11 . 04 . 2024

## மார்க்கண்டு தவச்செல்வம்

அராலி தெற்கு, அராலியைப் பிறப்பிடமாகவும் வேலணை வடக்கு 5 ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் தற்போது சுதுமலை கிழக்கு அரசடி வீதி, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு தவச்செல்வம் கடந்த 11.04.2024 வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - அன்னம்மா தம்பதியரின் மூத்த புத்திரியும், காலஞ்சென்ற மார்க்ண்டுவின் அன்பு மனைவியும், சிவலிங்கம், குணம், திருநீலகண்டன், லிங்கப்பிள்ளை, மகாதேவன், ஞானசக்தி, பரமேஸ்வரன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற பராசக்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஈஸ்வரி, விக்கினேஸ்வரி, ஞானேஸ்வரி, தேவிகா, நித்தியானந்தன், சாரதாதேவி, விமலா, ரதன் (பிரான்ஸ்), ரகு, ரகுநாதன் (பிரான்ஸ்), தமிழ்செல்வன் (பிரான்ஸ்) ஆகியோரின் தாயாரும் ஆவாரர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.04.2024) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் (அரசடி வீதி, சுதுமலை கிழக்கு) நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேலணை வீரன்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அரசடி வீதி,
சுதுலை கிழக்கு,
மானிப்பாய். (CS28524) N-1

தகவல்:
குடும்பத்தினர்
076 379 7574 / 077 947 7284



# ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 16 . 11 . 1967



மறைவு 15 . 04 . 2023

## அமரர் நாகராசா கணேசமூர்த்தி
(மூளாய்)
**திதி: 03.05.2024**

எம் குடும்பத்தின் ஒளி விளக்கே!!
நீங்கள் அணைந்து ஓராண்டாயிற்று..
உங்கள் ஒளிமுகமும் புன்சிரிப்பும்
அன்பான நினைவுகளும் இன்சொல்லும்
ஒவ்வொரு நொடியும் எம்முன்னே
நினைவில் எம்முடனும்
நிஜத்தில் இறையுடனும்
கலந்திருக்கும் நீங்கள்
ஆத்மாவாய் எம்முடன்
என்றென்றும் இணைந்திருந்து
ஆதரவாய் வழிநடத்தி
ஆன்மா சாந்தி பெற
ஆண்டவனை வேண்டுகின்றோம்!!

என்றென்றும் [illegible]
குடும்பத்தினர்



# 12 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு : 06.04.1939 உதிர்வு : 28.04.2012


அமரர் திருமதி
## சிவரூபராணி (இந்திரா) செந்திவடிவேலு
**திதி: சப்தமி (15.04.2024)**

அன்பின் உறைவிடமாய் எமை அன்போடு அணைத்து
நாங்கள் எல்லோரும் நலமே வாழ
அன்பு மழை பொழிந்து எமை வாழவைத்த தெய்வமே!
ஆண்டுகள் பன்னிரெண்டு கடந்தாலும் உங்கள் நாமம்
எந்நாளும் எம் நெஞ்சங்களை விட்டகலாது.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி!!!

"மாதர்வளவு"
[illegible] ஒழுங்கை,
[illegible]த்துறை.
(cs.28523) (N-1)

நினைவுகளுடன்
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தல டோனி அதிரடி பத்திரன மிரட்டல்

## மும்பையை சொந்த மண்ணில் துவைத்து எடுத்தது சென்னை

மும்பை இந்தியன்ஸ் அணிக்கு எதிரான நேற்றைய ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்கஸ் அணி 20 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அந்த அணி நடப்பு ஐ.பி.எல். தொடரில் சென்னைக்கு வெளியே பெற்ற முதல் வெற்றியாகவும் இது பதிவாகியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மும்பை இந்தியன்ஸ் அணி களத்தடுப்பைத் தேர்வு செய்தது. துடுப்பெடுத் தாட ஆரம்பித்த சென்னைக்கு ஆரம்பமே அதிர்ச்சியாக அமைந்தது. ரஹானே 4 ஓட்டங்களுடனும், ரச்சின் ரவீந்திர 21ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். ஆனால் சிவம் டுபே மற்றும் அணித் தலைவர் ருத்ராஜ் ஹைக்வாய்ட் இருவரும் இணைந்து மும்பையின் பந்து வீச்சை சிதறடித்து சென்னையை கௌரவமாக இலக்கை நோக்கி நகர்த்தினர். ஹைக்வாய்ட் 40 பந்துகளில் 69 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இறுதியில் 4 பந்துகள் மீதமிருக்கையில் டோனி களமிறங்கினார். மறுமுனையில் ஹார்திக் பாண்டியா பந்து வீசினார். எதிர்கொண்ட முதல் மூன்று பந்துகளையும் ஆறு ஓட்டங்களாக விளாசி தூள் கிளப்பினார் டோனி. டுபே இறுதிவரையில் ஆட்டமிழக்காமல் 38 பந்துகளில் 66 ஓட்டங்களையும், டோனி 4 பந்துகளில் 20 ஓட்டங்களையும் பெற்றுக்கொள்ள சென்னை அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 206 ஓட்டங்களைப்பெற்றது.

பதிலளித்த மும்பை அணி ரோஹித்தின் உதவியுடன் அதிரடியான ஆட்டத்தை ஆரம்பித்தது. 7 பந்துப்பரிமாற்றங்களில் இலக்கு இழப்பின்றி 70 ஓட்டங்களை மும்பை பெற்றிருந்த நிலையில் பந்துவீச அழைக்கப்பட்ட பத்திரன முதலாவது பந்திலேயே இலக்கை வீழ்த்தி அசத்தினார். தொடர்ந்து அதேபந்துப் பரிமாற்றத்தில் இன்னுமொரு இலக்கையும் சாய்த்தார். இதன் பின்னர் ரோஹித் திலக் வர்மா இணை ஆட்டத்தை மும்பை பக்கம் கொண்டு செல்ல முயன்றது. மீண்டும் பத்திரன திலக் வர்மாவை ஆட்டமிழக்கச் செய்த பின்னர் ஆட்டம் சென்னையின் கட்டுப்பாட்டுக்குள் முழுமையாக வந்தது. ரோஹித் இறுதிவரையில் ஆட்டமிழக்காமல் 63 பந்துகளில் 105 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தபோது மும்பை அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 186 ஓட்டங்களைப்பெற்று 20 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. பந்து வீச்சில் பத்திரன 28 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளைக் கைப்பற்றினார். (ஒ-5)

## முத்துஐயன்கட்டு வீதியை சீரமைக்கக் கோரிக்கை!

ஒட்டுசுட்டான், ஏப். 15

கற்சிலைமடுச் சந்தியிலிருந்து முத்துஐயன்கட்டுக்குச் செல்லும் வீதி மிக மோசமாகப் பயணிக்க முடியாத நிலையில் காணப்படுவதால் வீதியைப் புனரமைத்துத் தருமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த வீதி முத்துஐயன்கட்டு, கனகரத்தினபுரம், கற்சிலைமடு, மன்னாங்கண்டல் எனப் பல கிராமங்களுக்குச் செல்லும் வீதியாகக் காணப்படுகிறது.

இடம்பெயர்வின் முன் பேருந்துகள் செல்லும் வீதியாகக் காணப்பட்டது. தற்போது இந்த வீதி பல வருட சீரமைப்பின்றி குண்டும் குழியுமாக மாறியுள்ளதால் வீதியால் பயணிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே உரிய அதிகாரிகள் குறித்த வீதியைச் செப்பனிட்டுத் தரவேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-500)

# மரண அறிவித்தல்



மலர்வு 14.12.1937

உதிர்வு 14.04.2024

## அருணாச்சலம் நாகேஸ்வரி

இத்தியடிப் பிள்ளையார் கோவிலடி, சங்கத்தானை, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அருணாச்சலம் நகேஸ்வரி அவர்கள் நேற்று (14.04.2024) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் தேவரஞ்சன், தவேந்திரன், வரதராஜா, சாரதா, சுதர்ஷன், சுபத்திரா ஆகியோரின் தாயார் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (15.04.2024) திங்கட்கிழமை பிற்பகல் 02.00 மணிக்கு கண்ணாடிப்பிட்டி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இத்தியடிப் பிள்ளையார்
கோவிலடி,
சங்கத்தானை,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்
077 869 7268
077 042 4101

(CS 00219) S-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நடனேந்திரன் உயிரிழப்பு

யாழ்., ஏப். 15 வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் நடனேந்திரன் நேற்று இரவு திடீரென உயிரிழந்தார். உடல் நலக் குறைவால் பாதிக்கப்பட்ட அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட நிலையில் அங்கு உயிரிழந்தார். (ஒ-26-125)

## மரண அறிவித்தல்

மலர்வு
23 . 10 . 1949



உதிர்வு
13 . 04 . 2024

### கந்தையா பகவத்சிங்கம்

**(முன்னாள் யாழ். மாவட்ட அரச உணவுக் களஞ்சியப் பொறுப்பதிகாரி)**

சின்னாலடி, காரைநகரை பிறப்பிடமாகவும் புதுறோட், காரைநகரை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பகவத்சிங்கம் (முன்னாள் யாழ். மாவட்ட அரச உணவுக் களஞ்சியப் பொறுப்பதிகாரி) கடந்த (13.04.2024) சனிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான (மில்றி) கந்தையா - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பராசக்தியின் பாசமிகு கணவரும், தங்கேஸ்வரி (கனடா), உஷா (கனடா), புஸ்பகலா (U.K), விக்னேஸ்வரி (U.K), தனஞ்சயன் (யாழ். மாவட்ட வீதி சமிக்ஞை பொறுப்பதிகாரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கேதீஸ்வரன் (கனடா), பிரகலாதீஸ்வரன் (கனடா), ரமேஸ்குமார் (U.K), விமலேந்திரன் (U.K), சுவஸ்திகா (உப தபாலக பதிலாளர்) ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரியங்கா, அஜந்தன், ஜெயந்தன், கஜனி, சாயினி, மாதினி, கேசவி, சஞ்சித், மதுஷன், மாறன் ஆகியோரின் பாசமிகு பாட்டனாரும், துரைராஜசிங்கம் (அமெரிக்கா), பராசக்தி (ஓய்வுநிலை ஆசிரியர்), காலஞ்சென்ற சிவசக்தி ஆகியோரின் அன்பு சகோதரரும், கனகரட்னம், மனோன்மணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.04.2024) செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சாம்பலோடை இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


புதுறோட், காரைநகர்.

தகவல்:
குடும்பத்தினர்

(CS218) A-1

## மரண அறிவித்தல்

தோற்றம்
02 . 05 . 1989



மறைவு
12 . 04 . 2024

### ஏரம்பமூர்த்தி பார்த்தீபன்

யாழ்.புங்குடுதீவு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 737, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஏரம்பமூர்த்தி பார்த்தீபன் அவர்கள் 12-04-2024 வெள்ளிக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் ஏரம்பமூர்த்தி - சறோஜினிதேவி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு (பொன்னம்பல வாத்தியார்) - செல்லம்மா, கந்தையா - நல்லம்மா ஆகியோரின் அன்புப் பேரனும், வாசுகி, சுபாஸ்கரன், பிரபாகரன் (ஆசிரியர்), காண்டீபன், தேவகி (ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகோதரரும், ரூபகலா, யசோதா, கயல்நிலா, சுதாகரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், நிதிலன், அகிலேஷ், இலக்கியா, புகழ்நிலா, அச்சுதன், அகல்யா, திவ்யன், சைந்தவி, மேகவி, மைவிழி ஆகியோரின் சித்தப்பாவும், பிரவீன், மெலானி, சதுர்யா, விவேகா, சேரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சச்சிதானந்தம் - தயாநிதி, சிவதாசபிள்ளை- கமலாஜினி காலஞ்சென்றவர்களான கோடிலிங்கப்பிள்ளை, தங்கவேற்பிள்ளை மற்றும் இந்திராணிதேவி, சிவாஜி - செல்வராணி, புஸ்பவதி - ஆறுமுகம், கருணாவதி - இராமலிங்கம், பவானி - மகாதேவன் ஆகியோரின் பெறாமகனும், காலஞ்சென்ற திருலோகநாதன் மற்றும் புஷ்பராணி காலஞ்சென்ற அருணகிரிநாதன் மற்றும் சுந்தராம்பாள், சர்வலோகநாதன் - செல்வகலா, வைத்தீஸ்வரன் - யோகராணி, சசிதேவி - திருச்செல்வம், காஞ்சனமாலை - நாகேந்திரம் ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.04.2024) திங்கட்கிழமை காலை 8.00 மணியளவில் இன்பம் மலர்ச்சாலையில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

737, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 044 3372

(CS/54731) J-1

## மரண அறிவித்தல்



### நாகராசா மனோராணி

கச்சாய் வீதி, சாவகச்சேரியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும், கொண்ட நாகராசா மனோராணி அவர்கள் நேற்று முன்தினம் (13.04.2024) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகலிங்கம் - கனகம்மா தம்பதியரின் மூத்த புதல்வியும், குமாரகுலசிங்கம் நாகராசா அவர்களின் அன்பு மனைவியும், திருமதி நாகேஸ்வரி கனகலிங்கம் அவர்களின் பெறாமகளும், வாசுகி (ஜேர்மன்), கல்யாணி ,சங்கீதா (கனடா) பரந்தாமன் (கனடா) ஆகியோரின் அன்புத்தாயாரும் மிஷன் (ஜேர்மன்), சுதாகரன் (கனடா), காலஞ்சென்ற மதன், காலஞ்சென்ற காண்டீபன், சோபனா (கனடா) ஆகியோரின் மாமியும்,பிரவீண் (ஜேர்மன்), அபிசாத் (ஜேர்மன்), சங்கவி (கனடா), சாம்பவி (கனடா) ஆகியோரின் அன்பு பேர்த்தியும் காலஞ்சென்ற மகேந்திரன் (யாழ். போதனா வைத்தியசாலை) காலஞ்சென்ற கோகிலராணி, நிர்மலராணி, ரவிந்திரன் (கனடா), செல்வேந்திரன் (சுவிஸ்), கலாராணி (கனடா), குபேந்திரன் (நோர்வே), சொரூபராணி (நோர்வே), ஜெகேந்திரன் (லண்டன்) தயாராணி (லண்டன்), சயந்தராணி (யா/சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி ஆசிரியர்), கனிந்திரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், குணராசா முத்துலட்சுமி அவர்களின் மைத்துனியும், சுதனி, ரகுராம், அபிராம் ஆகியோரின் பெரியதாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.04.2024) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுகொள்ளவும்

கோயில் குடியிருப்பு,
கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

(CR 42219) S-1

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பில்லி சூனியத்தில் இருந்து விடுதலை பெற

# மதச் சபையொன்றுக்குச் சென்ற ஆசிரியை உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஏப். 15
இளவாலையிலுள்ள மதச்சபையில் பில்லி சூனியம் அகற்றுவதற்குச் சென்ற ஆங்கில ஆசிரியை ஒருவர் வயிற்றோட்டத்தால் பாதிக்கப்பட்ட நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் உயிரிழந்துள்ளார்.
ஆனைக்கோட்டையைச்சேர்ந்த அராலி முருகமூர்த்தி பாடசாலையில் கற்பிக்கும் ஆங்கில ஆசிரியையான கோவிந்தசாமி கல்பனா (வயது - 37) என்பவரே உயிரிழந்துள்ளார்.
கடந்த 2016ஆம் ஆண்டு, லண்டனைச் சேர்ந்த ஒருவருடன் இந்தியாவில் இவருக்குத் திருமணம் நடைபெற்றது. பின்னர் அவர் கணவனைப் பிரிந்து பெற்றோருடன் வசித்து வந்துள்ளார்.
அண்மையில் அவருக்கு சுகவீனம் ஏற்பட்டது. இதனையடுத்து அவருக்கு பில்லி சூனியம் ஏற்பட்டதாகத் தெரிவித்து இளவாலையிலுள்ள மதச் சபையில் கடந்த 5ஆம் திகதி சேர்த்துள்ளனர். அங்கு தங்கி நின்று பில்லி சூனியம் பார்த்து வந்தனர்.
இந்த நிலையில் நேற்றுமுன்தினம் வயிற்றுவலியும் வாந்தியும் ஏற்பட்டது. அதனையடுத்து அவர் போதகர் மூலம் தெல்லிப்பழை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பின்னர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்ப்பிக்கப்பட்டார். அங்கு அவர் உயிரிழந்தார்.
அவரது சடலம் மீதான இறப்பு விசாரணைகளைத் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உயிரிழப்புக்கான காரணம் தெரியவராத நிலையில் உடற்கூற்று மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.
(ஓ-26-27)

## விக்னேஸ்வரன்...

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளரைக் களமிறக்குவது தொடர்பில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி நகர்வுகளை முன்னெடுத்து வந்தது. இந்தக் காலப் பகுதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பேன் என தமிழ் மக்கள் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் பகிரங்கமாகத் தெரிவித்திருந்தார்.
திடீரென, தமிழ்ப் பொதுவேட்பாளரை ஆதரிப்பதாகத் தெரிவித்த விக்னேஸ்வரன், அதற்குரிய நகர்வுகளைத் தானே முன்னெடுத்தார். இது தொடர்பில் ஏனைய தரப்புகளுடன் அவர் ஆராயாமல் தன்பாட்டில் விடயங்களை நகர்த்தினார். இதுவே இப்போது சிக்கலுக்குரியதாகியிருக்கின்றது.
தெளிவான கொள்கை நிலைப்பாட்டில் இல்லாத விக்னேஸ்வரன், பொதுவேட்பாளர் விடயத்தைக் கையிலெடுத்திருப்பது சந்தேகங்களை உருவாக்கியுள்ளது. ஏற்கனவே பொதுவேட்பாளர் விடயத்துக்காகத் திட்டமிட்ட நகர்வுகளை ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி முன்னெடுத்திருந்த நிலையில் அதைக்குழப்பியடிக்கும் விதத்தில் விக்னேஸ்வரன் செயற்பட்டு வருவதாக அந்தக் கூட்டணியின் முக்கியமான தலைவர்கள் குறிப்பிடுகின்றனர். பொதுவேட்பாளர் விவகாரத்தை நீண்ட இலக்குடன் தாம் திட்டமிட்டு நகர்த்தும் நிலையில் அவற்றைக் குழப்பியடிக்காமல் விக்னேஸ்வரன் அதை ஆதரிக்கவேண்டும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.
(அ-ஒ-5)

## சித்தார்த்தன்...

நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் களமிறக்கப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி உறுதியாகவுள்ளது. இந்த நிலைப்பாட்டுடன் மிகப் பெரிய பாரம்பரிய கட்சியான இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியும் இணையவேண்டும். அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸும் இந்த நிலைப்பாட்டுடன் இணைந்து கொண்டால் நல்லது.
எமது இந்த முயற்சி தெற்கில் யாரையோ வெல்ல வைப்பதற்கான நகர்வு என்று அவர்கள் குற்றம் சொல்லிக்கொண்டிருக்கின்றார்கள். தேர்தலைப் புறக்கணிப்பது என்பதும் யாரையோ வெல்ல வைப்பதற்கான முயற்சியாகவே நான் பார்க்கின்றேன். கடந்த காலங்களில் தேர்தல் புறக்கணிப்பின்மூலம் அந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது.
ரணில் தோற்கடிக்கப்பட்டார். மஹிந்த வெல்ல வைக்கப்பட்டார். மஹிந்தவுக்கு சர்வதேச செல்வாக்கு இல்லை என்பதன் அடிப்படையில் அவரை வெல்ல வைப்பது நல்லது என்ற அபிப்பிராயம் இருந்தமையால் அந்த நகர்வு எடுக்கப்பட்டது. அதேபோன்றுதான் இப்போதும் புறக்கணிப்பு என்பதை இன்னொரு தரப்பை வெல்ல வைப்பதற்கான நகர்வுதான்.
கடந்தகாலங்களில் நாம் ஆதரித்த தென்னிலங்கை வேட்பாளர்கள் எமக்களித்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. இதனால்தான் நாம் இம்முறை தமிழ்ப் பொதுவேட்பாளர் என்ற விடயத்தை முன்வைக்கின்றோம் - என்றார். (அ-ஒ-இ)

## வேலையற்றோர்...

மாகாண ரீதியாகப் பார்க்கும்போது ஊவா மாகாணத்திலேயே வேலையற்றோர் எண்ணிக்கை கூடுதலாகக் காணப்படுகிறது. மாவட்ட ரீதியாக பதுளை மாவட்டத்தில்வேலையற்றோர்எண்ணிக்கைகூடுதலாகவும் மன்னார் மாவட்டத்தில் குறைவாகவும் காணப்படுகிறது. (அ-ஒ-6)

## காணாமல்...

அமெரிக்காவில் உள்ள புலம்பெயர் தமிழர்களின் குழு ஒன்று அமெரிக்க சட்டமன்ற உறுப்பினர்களின் கூட்டமைப்பை உருவாக்கியுள்ளது. இது எமக்கு மகிழ்ச்சியான விடயம். இவர்கள் சேர்ந்து, தமிழர்கள் மீதான அமெரிக்கக் கொள்கையில் ஒரு மாற்றத்தை வலியுறுத்தி, செயலாளர் பிளிங்கனுக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளனர்.
நடந்ததும் மற்றும் நடப்பதும் இலங்கையில் இனப்படுகொலை என்பதை அவர்கள் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டு இருந்தனர். அத்துடன் தமிழர்களுக்கு அவர்களின் அரசியல் எதிர்காலத்தை தாமே தீர்மானிக்கும் உரிமை உள்ளது, அதாவது அவர்கள் சுயநிர்ணய உரிமைக்குத் தகுதியானவர்கள். இதன்மூலம் தமிழர்களின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் வகையில் பொதுவாக்கெடுப்பு நடத்தப் படவேண்டும் என்றும் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டு இருந்தனர்.
அமெரிக்காவில் உள்ள நமது தமிழர்களின் ஆதரவுக்கு நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம்.
ஓய்வுபெற்ற மற்றும் தற்போதைய தமிழ் அரசியல்வாதிகள் மாறிவரும் உலக ஒழுங்குக்கு ஏற்ப மாற்றியமைக்க [illegible] ஊக்குவிக்கிறோம். அவர்கள் அரசியலில் இருந்து பின்வாங்கி, புதிதாக நிறுவப்பட்ட இறையாண்மை நாடுகளான மொண்டினீக்ரோ, தெற்கு சூடான், கொசோவோ, கிழக்குத் திமோர் போன்ற நாடுகளின் முன்மாதிரியைப் பின்பற்றி, தமிழ் இறையாண்மையை மீட்டெடுக்க புதிய தலைமுறையை அனுமதிக்க வேண்டும் - என்றனர். (அ-ஒ-110)

## நுகர்வோர்...

முழுவதிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தேசியக் கணக்காய்வு அலுவலகம் வெளியிட்டுள்ள 2023 ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
ஒன்பது மாவட்டங்களில் இருபத்திமூன்றுக்கு மேற்பட்ட விசாரணை அதிகாரிகள் கடமையாற்றுகின்றனர். ஆயினும் 50க்கும் குறைவான தேடுதல் நடவடிக்கைகளே இலங்கை முழுவதிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
பத்துப் பொருள்களின் மாதிரிகள் பரிசோதிக்கப்படுவது கட்டாயம் என நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் கூறுகிறது அதையும் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை அதிகாரிகள் செய்யவில்லை. விவசாய உபகரணங்கள் தொடர்பாக பொதுமக்கள் செய்யும் முறைப்பாடுகளைப் பரிசோதனை செய்வதற்கோ, சட்ட நடவடிக்கை எடுப்பதற்கோ கட்டளையிடுவதற்கோ உரிய பொறிமுறை காணப்படவில்லை என்றும் தேசிய கணக்காய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ-ஒ-6)

## சுமந்திரன்...

பட்டிருக்கின்றன. குமார் பொன்னம்பலம், சிவாஜிலிங்கம் ஆகியோர் போட்டியிட்டு இருக்கிறார்கள். அதற்குத் தமிழ் மக்கள் கொடுத்த ஆதரவு எப்படியாக இருந்தது என்பது எல்லோருக்கும் தெரிந்தவிடயம்.
ஆகவே இது சம்பந்தமாக நாங்கள் ஒரு தீர்மானத்தை எடுக்கும்போது இந்த சரித்திரப் பின்னணியையும், தென்னிலங்கையிலுள்ள இனவாத சக்திகள், தமிழ் வேட்பாளர் முன்வந்துவிட்டார் என்பதைச் சொல்லி இனவாதத்தைத் தூண்டத் திரும்பவும் முயற்சி செய்வார்கள் என்பதையும் அறிந்து சரியானதொரு தீர்மானத்தை எடுப்போம் - என்றார். (அ-ஒ-இ)

## கஜேந்திரன்...

உரிமையை நிலை நாட்டமுடியும் என்பது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பிரிவுபடாத நிலைப்பாடு.
தமிழ் மக்களது ஆதரவோடு வெற்றி பெற்ற ஆட்சியாளர்கள் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலையை மூடி மறைத்து சர்வதேச குற்றவிசாரணை என்ற பொறிமுறைக்குள் செல்லாது உள்ளக விசாரணைக்குள் முடக்கி தமிழர்களுக்கு ஏமாற்றம் அளிக்கின்ற செயற்பாட்டையே முன்னெடுத்து வந்திருக்கின்றார்கள். எனவே எந்தவொரு தென்னிலங்கை வேட்பாளரையும் நம்பமுடியாது.
இதேவேளை - தமிழ்ப் பொதுவேட்பாளர் என்பதும் மறைமுகமாக தென்னிலங்கையில் யாரோ ஒரு தரப்பை ஆதரிப்பதற்கான நகர்வுதான் - என்றார்.
(அ-ஒ-இ)

## ஈரானுக்கு...

ஈரான் கோரிக்கை விடுத்துள்ளது. இலங்கை அரசாங்கமும் ஈரானின் கோரிக்கையை ஏற்றுள்ளது.
தேயிலைக்குப் பதிலாக ஈரானிலிருந்து எரிபொருளை அரசாங்கம் இறக்குமதி செய்யவுள்ளது. ஈரானிலிருந்து இறக்குமதி செய்யப்படும் எரிபொருளுக்குரிய கொடுப்பனவை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இலங்கை தேயிலைச் சபைக்கு வழங்கும். (அ-ஒ-6)


## சிறீதரன்...

தொடர்ந்து நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே சிறீதரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
தமிழர்களின் தேசிய அபிலாஷைகளுக் காகப் பல ஜனாதிபதித் தேர்தல்களில் பலரை நாம் ஆதரித்தோம். ஆனால், அவர்களில் எவருமே தமிழர்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. இன்னும் சிலர் வெற்றிபெறவேயில்லை. மைத்திரி உள்ளிட்டோர் ஏமாற்றத்தையே தந்தனர். இதனால் தான் இம்முறை தமிழ்ப் பொதுவேட்பாளர் ஒருவரைக் களமிறக்கவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாகப் பலரும் சுட்டிக்காட்டுகின்றனர்.
தமிழர்களுக்கு நீதிவேண்டும், தமிழர்களின் கோரிக்கைகள் மற்றும் குற்றச்சாட்டுகளுக்குச் சர்வதேச விசாரணை வேண்டும், தமிழர்களுக்கு இறையாண்மை வேண்டும் என்பன உள்ளிட்ட செய்திகளைச் சொல்வதற்காக ஜனாதிபதித் தேர்தலில் நாம் இம்முறை பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தவேண்டியது அவசியமான, அரசியல்ரீதியான நல்லதொரு நகர்வாகவே உள்ளது - என்றார்.
(அ-ம 113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அ.யோ.இன்பராசா எழுதிய, இயற்கைச் சூழலைப் பாதுகாப்பது பற்றிய விழிப்புணர்வுத் தொகுப்பு உள்ளடங்கிய 'பிரபஞ்ச நேசம்' எனும் நூல் வெளியீட்டு விழா, யாழ்ப்பாணப் பொது நூலகக் கேட்போர் கூடத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. யாழ். கிறிஸ்தவ வாலிபர் சங்கத் தலைவர் அன்றூ பிரவீன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், யாழ். பல்கலைக்கழக விவசாய பீட முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி சி.ஜேம்சன் அரசகேசரி, கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முதல்வர் ச.லலீசன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ப-66)



ஏழாலை, புங்கடி புவனேஸ்வரி அம்பாள் ஆலய, குரோதி வருடப்பிறப்பு உற்சவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. (ப-66)

# பில் சோல்ட் சரவெடி
## ஊதித்தள்ளிய கொல்கத்தா




லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ் அணிக்கு எதிரான ஆட்டத்தில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் 8 இலக்குகள் வித்தியாசத்தில் அபார வெற்றிபெற்றது.

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் மற்றும் லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ் அணிகள் நேற்றைய ஆட்டத்தில் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற கொல்கத்தா அணி பந்து வீச்சைத் தேர்வு செய்ய லக்னோ அணி 7 இலக்குகளை இழந்து 161 ஓட்டங்களைப்பெற்றுக்கொண்டது. அந்த அணியில் நிகோலஸ் பூரன் 45 ஓட்டங்களும், கே.எல்.ராகுல் 39 ஓட்டங்களும் பெற்றுக்கொடுத்தனர். கொல்கத்தா சார்பில் மிட்செல் ஸ்டார்க் 3 இலக்குகளைக் கைப்பற்றினர்.

162 ஓட்டங்கள் என்ற எளிதான இலக்கை துரத்திய லக்னோ அணிக்கு பில் சோல்ட் அதிரடி தொடக்கம் கொடுத்தார். அவருக்கு அணித் தலைவர் ஸ்ரேயஸ் ஐயர் நிதானமாக இணைப்புக் கொடுக்க எளிதில் இலக்கை துரத்தி வெற்றிபெற்றது. பில் சோல்ட் 89 ஓட்டங்களுடனும் ஸ்ரேயஸ் ஐயர் 38 ஓட்டங்களுடனும் களத்தில் இறுதி வரை இருந்தனர்.

இதனால், கொல்கத்தா அணி 15.4 பந்துப் பரிமாற்றங்களில் 2 இலக்குகளை மாத்திரம் இழந்து 162 ஓட்டங்களைப் பெற்று வெற்றியைப் பெற்றது. (ஒ-5)


## சிறிராம் ஜுவல்லர்ஸ்

* யாழ். நகரில் தங்க நகை வியாபாரத்தில் 37 வருட அனுபவம் வாய்ந்த நாம் எதிர்வரும் சித்திரை வருடப் பிறப்பை முன்னிட்டு தங்க ஆபரணங்களுக்கான மாபெரும் விலைத்தள்ளுபடியினை வழங்கவுள்ளோம்.
* 22 கரட் ஆபரணங்களுக்கு செய்கூலி, சேதாரமின்றிய விலையில் வழங்கப்படும்.
* அனைத்து விதமான தங்க ஆபரணங்களும் 16.04.2024 ஆம் திகதி வரையில் விசேட விலைக் கழிவில் வழங்கப்படும்.
* அனைத்து ஆபரணங்களுக்கும் தரத்தை உறுதி செய்து தரச்சான்றும் வழங்கப்படும்.

இல. 158, 193
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
077 165 1729, 07777 305 67, 021 222 8334

(CR 42200)V-1


## மரண அறிவித்தல்



தோற்றம்
06 . 07 . 1986

மறைவு
13 . 04 . 2024

**கல்பனா கோவிந்தசாமி**

(ஆங்கில ஆசிரியர் - யா/முருகமூர்த்தி அ.த.க.பாடசாலை, அராலி)

ஆனைக்கோட்டை யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கல்பனா கோவிந்தசாமி அவர்கள் நேற்று முன்தினம் (13.04.2024) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் கோவிந்தசாமி - சாந்தினி தேவி தம்பதியரின் அன்பு மகளும், பகீரதியின் சகோதரியும், துஸ்யந்தனின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.04.2024) திங்கட்கிழமை பி.ப 02.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக காக்கைதீவு கரையாம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிலுவை மதவடி வீதி,
ஆனைக்கோட்டை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்
076 683 0135/ 076 225 0891

S 00217)S-1

## மரண அறிவித்தல்



தோற்றம்
29 . 03 . 1968

மறைவு
12 . 04 . 2024

**கணபதிப்பிள்ளை ஈஸ்வரன்**

BA(Hons), PGDE, MA(SS)

தொழில் வழிகாட்டல் ஆலோசனை அதிகாரி – தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகம்
முன்னாள் ஆசிரியர் – யா/ மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்
முன்னாள் ஆசிரியர் – யா/நாவற்குழி மகா வித்தியாலயம்
முன்னாள் பாடசாலை மேம்பாட்டு திட்ட வலய இணைப்பாளர் – யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்

மட்டுவிலைப் பிறப்பிடமாகவும், கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை ஈஸ்வரன் அவர்கள் 12.04.2024 வெள்ளிக்கிழமை அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மாணிக்கம் தம்பதியரின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்ற நடராசா தேவி தம்பதியரின் அன்பு மருமகனும், தயாளினி அவர்களின் அன்புக் கணவரும், அபிநயமேனன், அம்ஸவி ஆகியோரின் அன்புத் தந்தையாரும், விநாயகமூர்த்தி, பாலசுப்பிரமணியம், புனிதமலர் ஆகியோரின் அன்புச் சகோதரரும், தயானந்தராஜா, மோகன்ராஜ் மற்றும் அமரர் கமலாதேவி, ரோகினி, முருகையா ஆகியோரின் அன்பு மைத்துனரும் தர்மினி, ஜனனி ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.04.2024) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, தகனக்கிரியைகள் கட்டையாலடி இந்து மயானத்தில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புகையிரத நிலைய வீதி
கோண்டாவில்
T.P 0706710000

தகவல்: குடும்பத்தினர்



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.04.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org